செய்தி வெளியீடு எண். 51-2016 நாள்: 24.10.2016

விழுப்புரம் மாவட்டம் முன்னோடி வங்கியான இந்தியன் வங்கி மற்றும் அனைத்து வணிக வங்கிகளின் சார்பாக பாரதப் பிரதமரின் **“அனைவருக்கும் வங்கி சேவை”** சிறப்பு விழிப்புணர்வு முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் 26.10.2016 தொடங்கி வைக்க உள்ளார்கள்.

******

பாரத பிரதமரின் **“அனைவருக்கும் வங்கி சேவை”** திட்டத்தின் சிறப்பு விழிப்புணர்வு முகாமினை வருகின்ற 26.10.2016 புதன்கிழமை அன்று காலை 09.30 மணிக்கு விழுப்புரம் திருச்சி ரோட்டில் உள்ள சோலை மகாலில் இச்சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைக்க உள்ளார்கள்.

இச்சிறப்பு விழிப்புணர்வு முகாமில் இதுவரை, இத்திட்டத்தின்கீழ் வங்கிக் கணக்கு துவங்காதவர்களும், பிரதமமந்திரியின் விபத்து காப்பீட்டுத் திட்டம், ஆயுள் காப்பீட்டுத் திட்டம், அடல் பென்சன் திட்டங்களில் சேராதவர்களும் இச்சிறப்பு முகாமில் கலந்து கொண்டு மேற்கண்ட திட்டங்களில் தங்களை இணைத்துக் கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

பாரத பிரதமரின் அனைவருக்கும் வங்கி சேவை திட்டங்களின் சிறப்பு அம்சங்களான பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா வங்கி கணக்குத் துவங்குவதற்கு, ஆதார் அட்டை, ரூ.1 லட்சம் விபத்துக் காப்பீடு உள்ளடக்கிய ரூபே டெபிட் கார்டு வழங்கப்படும். இக்காப்பீடை பெற ரூபே டெபிட் கார்டை குறைந்தது 90 நாட்களுக்கு ஒருமுறையாவது பயன்படுத்த வேண்டும்.

விபத்துக் காப்பீட்டுத் திட்டம்: வங்கி கணக்கு வைத்துள்ள அனைவரும் 18 வயது முதல் 70 வயதிற்குட்பட்ட அனைவரும் வருடத்திற்கு ரூ.12 பிரிமியத்தில், ரூ.2 லட்சம் பயன்பெறும் விபத்துக் காப்பீட்டுத் திட்டமாகும்.

ஆயுள் காப்பீடு திட்டம்: வங்கி கணக்கு வைத்துள்ள 18 வயது முதல் 50 வயதிற்குட்பட்ட அனைவரும் வருடத்திற்கு ரூ.330 பிரீமியத்தில் ரூ.2 லட்சம் பயன் பெறும் ஆயள் காப்பீட்டு திட்டமாகும்.

அடல் பென்ஷன் யோஜனா திட்டம்: வங்கி கணக்கு வைத்துள்ள 18 வயது முதல் 40 வயதிற்குட்பட்டுள்ளவர்களுக்கான ரூ.1000 முதல் ரூ.5000 வரையிலான ஓய்வூதியத் திட்டம். ரூ.1000க்கான பென்ஷன் திட்டத்தில் 18 வயதில் சேர்ந்தால் ரூ.42ம், ரூ.40 வயதில் சேர்ந்தால் ரூ.291ம், மதாமாதம் செலுத்த வேண்டும்.

முத்ரா கடன் திட்டம்: இத்திட்டத்தின் கீழ் பண்ணை சாராத உற்பத்தி, செயலாக்கம், வணிகம் அல்லது சேவைத்துறை திட்டங்களுக்கு மூன்று வகையான கடன் திட்டங்கள் உள்ளன. சிசு கடன் திட்டம்: ரூ.50000 வரை, கிஷோர் கடன் திட்டம்: ரூ.5 லட்சம் வரை, தருண் கடன் திட்டம்: ரூ.10 லட்சம் வரை.

ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம்: உற்பத்தி, செயலாக்கம், வணிகம் அல்லது சேவைத்துறை திட்டங்களுக்கு ஆதி திராவிடர் அல்லது பழங்குடியினர் மற்றும் மகளிர் தொழில் முனைவோருக்கான வங்கிக்கடன் ரூ.10 லட்சம் முதல் ரூ.1 கோடி வரை கடன் வசதி திட்டமாகும். மாலை 5 மணிவரை நடைபெறும் இச்சிறப்பு முகாமில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயனடைய வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

பாரத பிரதமரின் முத்ரா கடன் திட்டம் மற்றும் ஸ்டாண்ட் ஆப் இந்தியா திட்டங்கள் பற்றி SIDBI வங்கியின் மேலாளர் இச்சிறப்பு முகாமில் விளக்கம் அளிக்க உள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.